**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.1**
**MCOP.NO.248/2020**

| | | |
|---|---|---|
| **NAME** | : | அம்சவள்ளி |
| **FATHER NAME** | : | |
| **VILLAGE** | : | |
| **TALUK** | : | |
| **CALLING** | : | |
| **RELIGION** | : | |
| **AGE** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of 22.07.2022.**

குறுக்கு விசாரணை

இந்த விபத்தில் என் கணவர் இறந்துவிட்டார் என்றால் சரி. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரி. புகார் நான்தான் கொடுத்தேன். என் கணவர் டிராக்டர் மோதி இறந்துகிடந்தார் என்று புகார் கொடுத்துள்ளேன். புகாரில் கூறப்பட்டுள்ள விவரங்கள் சரிதான். டிராக்டருக்கு தனியாக ரிஜிஸ்ட்ரேஷன், டிரெய்லருக்கு தனியாக ரிஜிஸ்ட்ரேஷன் என்றால் சரிதான். என் மனுவில் டிரெய்லரின் நெம்பரை காட்டியுள்ளேன் என்றால் சரிதான். அந்த டிரெய்லர் கலாவதி பெயரில் உள்ளது என்றால் சரிதான். நான் கலாவதியை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. டிரெய்லருக்கு இன்சூரன்ஸ் எதுவும் எடுக்கவில்லை என்றால் தெரியாது. ஓட்டுனருக்கு டிரைவிங் லைசன்ஸ் இல்லை என்றால் எனக்குத் தெரியாது. என் கணவர் வருமானத்தைப் பொறுத்து எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் கணவர் Personal Accident coverage policyல் ரூ.15 லட்சம் கட்டியுள்ளார். அந்த ஆவணம் எ.ம.த.சா.ஆ.2. அந்த தொகையை நாங்கள் வாங்கிவிட்டோம். டிராக்டருக்கும் டிரெய்லருக்கும் இன்சூரன்ஸ் இல்லை என்பதாலும் ஓட்டுனருக்கு டிரைவிங் லைசன்ஸ் இல்லை என்பதாலும் 2ம் எதிர்மனுதாரர் எந்த நஷ்டஈடும் தரத்தேவையில்லை என்றால் சரியல்ல. மனு 2ம் எதிர்மனுதாரர் பொறுத்து தள்ளுபடிசெய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சர்க்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று சொல்லி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.